7001

Register Number | | | | | |

# பகுதி I — தமிழ் — முதல் தாள்

( செய்யுளும், இலக்கணமும் )

# Language — Part I — TAMIL — Paper I

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

*குறிப்பு* : 1) விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினவாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

2) வினா எண் VI க்கான விடை மட்டும் செய்யுள் வடிவில் அமைதல் வேண்டும்.

I. பின்வரும் வினாக்களுள் எவையேனும் ***நான்கனுக்கு*** ( *ஐந்து ஐந்து வரிகளில்* ) விடை எழுதுக : 4 × 2 = 8

1. புறநானூற்றால் அறியப்படும் செய்திகள் யாவை ?

2. மறவற்க எனவும், துறவற்க எனவும் திருவள்ளுவர் எவற்றைக் குறிப்பிடுகிறார் ?

3. தேம்பாவணி - பொருள் எழுதுக.

4. கவம்பகம் - பெயர்க் காரணம் தருக.

5. மேகக் கூட்டங்கள் எவ்வாறெல்லாம் உருவகம் செய்யப் பெறுகின்றன ?

6. 'தம்பிரான் தோழர்' என அழைக்கப்பட்டவர் யார் ? காரணம் யாது ?

[ Turn over

II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் ***மூன்றனுக்கு*** ( *பத்துப் பத்து வரிகளில்* ) விடை எழுதுக : 3 × 4 = 12

7. இறைவாழ்த்துப் பாடலால் அறியலாகும் செய்திகளை எழுதுக.

8. வினைமேற் சென்ற தலைவனிடம் தூதுவந்த பாணன் தெரிவித்த செய்தி யாது ?

9. வினைத்திட்பத்தின் சிறப்பைத் திருவள்ளுவர் எங்ஙனம் காட்டியுள்ளார் ?

10. கணையாழி கண்ட சீதையின் செயல்கள் யாவை ?

11. கோலியாத்தின் இகழ்ச்சியுரைகளையும், சவுல் மன்னனின் அறிக்கையையும் விளக்குக.

III. பின்வரும் வினாக்களுக்குள் எவையேனும் ***மூன்றனுக்கு*** ( *பத்துப் பத்து வரிகளில்* ) விடை எழுதுக : 3 × 4 = 12

12. இராசராச சோழனின் வில், வாள், முரசு, கொடி, குடை குறித்துக் கூறப்பட்டன யாவை ?

13. சுவடிச் சாலையில் இருக்க வேண்டிய நூல்கள் யாவை ?

14. சுரதா ''ஓர் உவமைக் கவிஞர்'' என்பதைச் 'சிக்கனம்' என்ற அவரது பாடல்களிலிருந்து சான்று காட்டி விளக்குக.

15. தென்கரை நாட்டின் வளம் குறித்து முக்கூடற்பள்ளு உரைப்பனவற்றை எழுதுக.

16. சிலுவையிற் பரித்தியாகம் செய்த பெருமானைக் கிருஷ்ணப்பிள்ளை எவ்வாறு அஞ்சலி செய்கிறார் ?

IV. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ***ஒன்றனுக்கு*** இருபது *வரிகளில்* விடை எழுதுக : 1 × 8 = 8

17. 'செய்நன்றியறிதல்' பற்றி திருவள்ளுவர் கூறியுள்ள கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

18. கண்ணகியின் சூளுரையும், நகர்மாந்தர் மயங்கிக் கூறியனவும் யாவை ?

19. பாரதியார் காட்டும் அந்திவான வருணனையைத் தொகுத்து வரைக.

V. பின்வரும் செய்யுளின் கீழ் கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக : $4 \times 1 = 4$

20. "நெடுந்தேர் ஊர்மதி வலவ
முடிந்தன்று அம்ம நாம் முன்னிய வினையே"

அ) இஃது யார், யாரிடம் கூறிய கூற்று ?

ஆ) இக்கூற்றமைந்த செய்யுளைப் பாடியவர் யார் ?

இ) இப்பகுதி எந்நூலில் இடம் பெற்றுள்ளது ?

ஈ) இவ்வாறு கூறப்படுவதன் காரணம் யாது ?

அல்லது

21. "திங்களொன் றிருப்பன் இன்னே; திருவுளம் தீர்ந்த பின்னை
மங்குவென் உயிரோ டென்றுன் மலரடி சென்னி வைத்தாள்"

அ) இதனைக் கூறியவர் யார் ?

ஆ) யாரிடம் கூறினார் ?

இ) இவ்வரி இடம் பெற்ற நூலின் பெயர் யாது ?

ஈ) "மலரடி சென்னி வைத்தாள்" - எனக் குறிப்பிடப் படுபவர் யார் ?

VI. 22. "நண்ணுமிளமை" எனத் தொடங்கும் மொழிவாழ்த்துப் பாடலை அடிபிறழாமல் எழுதி, அதன் பாவகையையும் எழுதுக. $4 + 2 = 6$

23. "எப்பொருள்" - எனத் தொடங்கும் குறளையும், "மகற்கு" என முடியும் குறளையும் அடிபிறழாமல் எழுதுக. $2 + 2 = 4$

VII. 24. எவையேனும் இரண்டு சொற்களுக்கு உறுப்பிலக்கணம் தருக : $2 \times 2 = 4$

அ) அசைத்த ஆ) வந்தனன் இ) புக்கேன்

ஈ) காண்கிலர் உ) சுழன்று ஊ) விடுவார்.

25. கீழ்க் கோடிட்ட தொடர்களுள் ஏதேனும் மூன்றனுக்கு இலக்கணக் குறிப்பு எழுதுக : 3 × 2 = 6

அ) என்றடி <u>வாழ்த்துவம்</u>

ஆ) சிறு <u>கருங்காக்கை</u>

இ) <u>வையகமும் வானகமும்</u>

ஈ) <u>புடை புடை</u> மியக்கா

உ) அவியா <u>மதிவிளக்கு</u>

ஊ) <u>தழீஇக்</u> கொள்ள

26. எவையேனும் இரண்டு தொடர்களுக்குப் புணர்ச்சி விதி தருக : 2 × 2 = 4

அ) சுயன்முள் ஆ) பெருந்தேர் இ) சின்னாள்

ஈ) மணிக்கழுத்து உ) பூங்கொடியாள் ஊ) உனக்கில்லை.

27. சான்று தந்து விளக்குக. 1 × 4 = 4

முல்லைத் திணை அல்லது பொருண் மொழிக் காஞ்சி.

28. "அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை

இகழ்வார்ப் பொறுத்தல் தலை."

- இக்குறட்பாவில் அமைந்த அணியைச் சுட்டி விளக்குக.

அல்லது

எடுத்துக்காட்டு உவமையணி அல்லது சொற்பொருட் பின்வருநிலையணியை விளக்குக. 1 × 4 = 4

VIII. பொருத்துக : 4 × 1 = 4

| நூல் | | சமயம் |
|---|---|---|
| 29. மணிமேகலை | — | சமணம் |
| 30. நீலகேசி | — | கிறித்தவம் |
| 31. இரட்சணிய யாத்திரிகம் | — | இசுலாம் |
| 32. சீறாப்புராணம் | — | பௌத்தம் |
| | — | வைணவம். |

IX. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக : 16 × 1 = 16

33. கம்பர் காலத்தில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர்

அ) நக்கீரர்

ஆ) ஒட்டக்கூத்தர்

இ) இளங்கோவடிகள்.

34. புறநானூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள துறைகள்

அ) 11

ஆ) 65

இ) 75.

35. அகநானூற்றுப் பாக்களின் அடி வரையறை

அ) 4 அடிமுதல் 8 அடிவரை

ஆ) 9 அடிமுதல் 12 அடிவரை

இ) 13 அடிமுதல் 31 அடிவரை.

36. கொண்டாடப் பெறும் திருவள்ளுவராண்டின்படி அவர் வாழ்ந்த காலம்

அ) கி.மு. 31

ஆ) கி.பி. 31

இ) கி.மு. 18.

37. நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் எனப் பாராட்டியவர்

அ) கவிமணி

ஆ) பாரதியார்

இ) பாரதிதாசனார்.

[ Turn over

38. சிறிய திருவடி என்றழைக்கப்படுபவர் ........................ .

அ) கருடன்

ஆ) அனுமன்

இ) வீடணன்.

39. சதுரகராதி என்ற நூலை இயற்றியவர் ........................ .

அ) பவணந்தி முனிவர்

ஆ) வீரமாமுனிவர்

இ) அகத்திய முனிவர்.

40. 'திவ்விய கவி' என்ற பெயரால் அழைக்கப்படுபவர் ........................ .

அ) பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்.

ஆ) ஒட்டக்கூத்தர்.

இ) குமர குருபரர்.

41. 'நமக்குத் தொழில் கவிதை நாட்டிற்கு உழைத்தல்' எனப் பாடியவர் ........................ .

அ) வாணிதாசன்

ஆ) பாரதிதாசன்

இ) பாரதியார்.

42. 'வாழ்வினிற் செம்மையைச் செய்பவள் நீயே' என்ற பாடலைத் தமிழ் வாழ்த்தாக ஏற்றுக் கொண்டுள்ள அரசு ........................ .

அ) தமிழ்நாடு அரசு

ஆ) புதுவை அரசு

இ) பிரெஞ்சு அரசு.

43. உவமைக் கவிஞர் சுரதாவின் இயற்பெயர் ...................... .

அ) இராமகோபாலன்

ஆ) இராசகோபாலன்

இ) நந்தகோபாலன்.

44. கவிஞர் ஏறு, பாவலர் மணி முதலிய பட்டங்களைப் பெற்றவர் ...................... .

அ) கவிஞர் சுரதா

ஆ) வாணிதாசன்

இ) முடியரசன்.

45. சின்னச் சீறா என்ற நூலை எழுதியவர் ...................... .

அ) உமறுப் புலவர்

ஆ) குணங்குடி மஸ்தான்

இ) பனு அகமது மரைக்காயர்.

46. பால்வீதி என்ற நூலின் ஆசிரியர் ...................... .

அ) தாரா பாரதி

ஆ) அப்துல் ரகுமான்

இ) மோகனரங்கன்.

47. சைவத் திருமுறைகளில் சுந்தரர் தேவாரம் ...................... யாக இடம் பெற்றுள்ளது.

அ) முதலாம் திருமுறை

ஆ) ஏழாம் திருமுறை

இ) பன்னிரெண்டாம் திருமுறை.

48. வழிபாட்டுப் பாடலுள் திருமால் பற்றிப் பாடியவர்

அ) சுந்தரர்

ஆ) நீலகேசி

இ) குலசேகரர்.

X. கோடிட்ட இடங்களை ஏற்ற சொற்களால் நிரப்புக : 2 + 2 = 4

49. காலத்தினாற் செய்த ............................ சிறிதெனினும்

ஞாலத்தின் மாணப் ............................ .

50. கொன்றன்ன ............................ செயினும் அவர் செய்த

ஒன்றுநன் ............................ கெடும்.